# செந்தமிழ்

தொகுதி : 93 | ஜூன் 1999 | பகுதி : 6

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்,. பி.எச்.டி.,

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி, | தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே.எஸ்.டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஜயா | உறுப்பினர் |
| திரு. அ. தட்சிணாமூர்த்தி | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல் | மதுரை |
| பேரறிஞர் | செ. கந்தசாமி | முதல்வர் |
| பேரறிஞர் | ம.ரா.போ. குருசாமி | கோயம்பத்தூர் |
| பேரறிஞர் | ச. மெய்யப்பன் | சிதம்பரம் |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன் | துணைவேந்தர், தஞ்சை |
| பேரறிஞர் | கு. துரைராசு | எட்டையபுரம் |
| பேரறிஞர் | அ.அ. மணவாளன் | சென்னை |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன் | அல்லூர், திருச்சி |
| பேரறிஞர் | அ. தட்சிணாமூர்த்தி | தஞ்சாவூர் |
| பேரறிஞர் | எஸ்.எம். கமால் | இராமநாதபுரம் |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி | மதுரை |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன் | மதுரை |
| பேரறிஞர் | அ. மா. பரிமணம் | தஞ்சாவூர் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்


| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ 6 | |

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

# பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் ... 183
*பேரறிஞர் நா. பாலுசாமி*

2. இயற்கையும் மாசுக்கட்டுப்பாடும் ... 195
*ச. சாந்த நாகநாத சேதுபதி*

3. நாட்டார் நாடகங்களின் அமைப்பும் உத்தியும் ... 204
*ந. விஜயசுந்தரி*

4. இரு போகம் ... 214
*பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி*

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- *பேரறிஞர்* நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## சூத்திரம் 275

*(இகும்-சின்)*

அவற்றுள்
இகுமும் சின்றும் ஏனை இடத்தொடும்
தகுநிலை உடைய என்மனார் புலவர்

முன் சூத்திரத்தில் கூறப்பட ஆறு இடைச்சொற்களில் இகும், சின் என்னும் இரண்டு இடைச் சொற்கள் முன்னிலையில் வருவதோடு படர்க்கையிலும் தன்மையிலும் வரும். இச்சூத்திரம் முன் சூத்திரத்திற்குச் சிறப்பு விதியாம்.

(எ-டு) 'கண்டிகும் அல்லமோ' - (இகும்)
'கண்ணும் படுமோ வென்றிசின் யானே' - (சின்)
- இங்கு, இகும், சின் என்பன தன்மையில் வந்தன.
'புகழ்ந்திரு மல்லரோ பெரிதே' - (இகும்)
'யாரஃது அறிந்திசினோரே' - (சின்)
- இங்கு, இகும் - சின் என்பன படர்க்கையில் வந்தன.

## சூத்திரம் 276

*(அம்ம)*

அம்ம கேட்பிக்கும்

'அம்ம' என்னும் இடைச்சொல் ஒருவனை ஒன்று கேட்பாயாக என்ற பொருளில் வரும்.

(எ-டு) 'அம்ம வாழி தோழி - தோழியே கேள்' என்பது பொருள். (முன்னிலையில் மட்டும் வரும்)

## சூத்திரம் 277

### (ஆங்க)

ஆங்க உரையசை

ஆங்க என்னும் இடைச்சொல் அசையாகவரும்.

(எ-டு) 'ஆங்க'க் குயிலும் மயிலும் காட்டி' - ஆங்க அசைச்சொல்

## சூத்திரம் 278

### (ஒப்பில் போலி)

ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்

ஒப்புப் பொருள் தராத போல என்னும் இடைச்சொல்லும் அசைச் சொல்லாகவே நிற்கும்; பொருள் உணர்த்தாது.

(எ-டு) 'மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும்' - போல அசையாகவே நின்றது.

## சூத்திரம் 279

### (அசைச்சொற்கள்)

யாகா

பிறபிறக்கு அரோ, போ, மாது எனவரூஉம்

ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்னும் ஏழு இடைச் சொற்களும் அசைச் சொற்களாகவே வரும்; பொருள் உணர்த்த மாட்டா.

(எ-டு) யா பன்னிருவர் மாணாக்கர் உளர் அகத்தியனார்க்கு
- யா என்பது அசை

'புறநிழல் பட்டாளோ இவள் இவண் காண்டிகா'
- கா என்பது அசை

'தான் பிற வரிசை அறிதலின்' - பிற என்பது அசை.

'அது பிறக்கு - பிறக்கு அசை'

'இருங்குயில் ஆலும் அரோ' - அரோ அசை
'பிரியின் வாழாது என்போ' - போ என்பது அசை
'விளிந்தன்று மாது அவர்த்தெளிந்த என் நெஞ்சே'
- மாது அசைச்சொல் (இவ் ஏழு அசைநிலைச் சொற்களும் வேறு பொருள் தாரா.)

## சூத்திரம் 280

*(ஆக, ஆகல், என்பது)*

ஆக ஆகல் என்பது என்னும்
ஆவியின் மூன்றும் பிரிவில் அசைநிலை

ஆக, ஆகல், என்பது என்னும் மூன்று இடைச் சொற்களும் அசைச் சொற்களாக வரும்போது, தனித்து நிற்காமல் இரட்டித்து நிற்கும். தனித்து நின்றால், அவை அசைச் சொற்கள் ஆகா.

(எ-டு) அரசன் குடிகாத்தலில் தவறினால், நாட்டில் பசுவும் பால் தராது என்று ஒருவன் கூறும்போது, கேட்போன் ஆக ஆக என்றோ, ஆகல் ஆகல் என்றோ கூறுவான். இது உடன் பாட்டுவகையால் ஆமோதிப்பதாகும்.

'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்று ஒருவன் கூறும் போது அதனை வலியுறுத்துவோன் என்பது, என்பது என்று கூறுவான். இவ்வழக்காறு இன்று நடைமுறையில் இல்லை. இன்றைக்கு ஆக, ஆகல் என்பனவற்றிற்குப் பதிலாக ஆமாம், ஆமாம் என்ற சொற்களும், என்பது, என்பது என்பதற்குப் பதிலாக 'அப்படிச் சொல், அப்படிச் சொல்' என்ற சொற்களும் வழக்கில் உள்ளன என்று அறிஞர் பூவராசம்பிள்ளை அவர்கள் தரும் விளக்கம் மிகவும் பொருத்தமாக உள்ளது.

## சூத்திரம் 281

*(ஔ - இடைச்சொல்)*

ஈரளபு இசைக்கும் இறுதியில் உயிரே
ஆயியல் நிலையும் காலத் தானும்
அளபெடை இன்றித் தான்வரும் காலையும்
உளவென மொழிப்பொருள் வேறு படுதல்
குறிப்பின் இசையால் நெறிப்படத் தோன்றும்

மொழிக்கு ஈற்றில் வாராத இரண்டுமாத்திரை ஒலிக்கும் ஔ என்னும் நெட்டெழுத்து, மேலே கூறிய இடைச்சொற்களைப் போல இரட்டித்து (இணையாக) வருமிடத்திலும், அள--பெடுத்து நிற்கும் போதும், தனியே நிற்கும் போதும் குறிப்பாலும் இசையாலும் நெறிப்பட நிற்பதால், அதன் பொருள் வேறுபடும் என்பர் இலக்கண நூலோர்.

(எ-டு) 1. ஔஔ இவன் தவம் செய்தவாறு - இவ்வாக்கியத்தில் ஔ என்பது சிறப்பினை உணர்த்தியது

2. ஒரு தொழில் செய்பவனை, ஔஔ இனிப்போதும் - இங்கு மாறுபாடு தோன்றும்.

3. ஔஉ ஒருவன் இரவலர்க்கு ஈந்தவாறு - இங்கு வியப்புத் தோன்றும்

4. ஔ அவன் முயலுமாறு - இங்கு வெகுளி தோன்றும் (இவை இன்று ஓகாரமாக வழங்கும்)

## சூத்திரம் 282

*(குறிப்பிடைச் சொற்கள்)*

நன்றுஈற்று ஏயும் அன்றுஈற்று ஏயும்
அந்துஈற்று ஓவும் அன்ஈற்று ஓவும்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்

நன்று ஈற்று ஏ - நன்றே எனவும்
அன்று ஈற்று ஏ - அன்றே எனவும்
அந்து ஈற்று ஓ - அந்தோ எனவும்
அன் ஈற்று ஓ - அன்னோ எனவும் வரும்
இவை எல்லாம் குறிப்பால் பொருள்தரும் இடைச்சொற்கள்.

(எ-டு) 1. குற்றம் செய்த ஒருவன், தான் செய்யவில்லை என்று மறுக்கும்போது அதனை ஏற்றுக் கொள்ளாத ஒருவன் நீ கூறுவது நன்றே, நன்றே என்னும்போது, 'தீது' என்னும் குறிப்புப் பொருள் தருவது காணலாம்.

2. தருமம் செய்துவரும் ஒருவன் துன்பம் அடையும்போது அவனைப் பார்த்து மற்றொருவன் இஃது ஊழ்வினை என்னும்போது, ஊழின் பயனை அனுபவித்தே யாக வேண்டும் என்னும் குறிப்புத் தோன்றும்.

3. அந்தோ என் தந்தையை இழந்தேன் - என்பதிலும்

4. 'அன்னோ என்னாவது கொல்' - என்பதிலும் இரங்கல் குறிப்பத்தோன்றுவது காண்க

## சூத்திரம் 283

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்
தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே.

ஒரு வாக்கியத்தில் எச்சப் பொருள்தரும் உம் என்னும் இடைச்சொல்லும், எதிர்மறைப் பொருள்தரும். 'உம்' இடைச்சொல்லும் மயங்கி வரமாட்டா; அஃதாவது கலந்து வாரா.

(எ-டு) சாத்தனும் வந்தான் - உடன்பாட்டுத் தொடர்
கொற்றனும் வரலும் உரியன் - எதிர்மறை (வாராமலும் இருக்கலாம் என்ற எதிர்மறை தோன்றுதல் காண்க)

எனவே, சாத்தனும் வந்தான், கொற்றனும் வரலும் உரியன் என்ற இரண்டு தொடரும் இயையாமை காணலாம்.

## சூத்திரம் 284

எஞ்சுபொருள் கிளவி செஞ்சொல் ஆயின்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்

எச்சப் பொருள்தரும் எச்ச உம்மையால் தழுவப்படும் எஞ்சு பொருள் கிளவி, உம் என்னும் இடைச்சொல் பெறாது செஞ் சொல்லாய் வரின், அவ்வும்மை பெறாத சொல்லை அவ்வும்மைத் தொடருக்குப் பின் சொல்லாது முன் சொல்லுக என்பதாம். (செஞ்சொல் - 'உம்' பெறாது இயல்பாக நிற்கும் சொல்)

(எ-டு) சாத்தன் வந்தான், கொற்றனும் வந்தான் - இத்தொடர்களில் முன்னது உம்மை பெறவில்லை; பின்னது உம்மை பெற்றது. இவ்வாறு செஞ்சொல் உம் பெற்ற பெயருக்குமுன் வந்தது. காண்க. அஃதாவது, எச்ச உம்மை பெற்ற தொடர் இரண்டு தொடர்களாகவே நிற்கும். அவற்றுள் ஒன்று உம்மை இன்றி வருமாயின், அவ்வும்மை இல்லாத தொடர் முதலில் நிற்றல் வேண்டும் என்பது கருத்து.

## சூத்திரம் 285

*(முற்றும்மை எச்சப் பொருளில் வரல்)*

முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கில்
எச்சக் கிளவி உரித்தும் ஆகும்

முற்றும்மையை அடுத்து நின்ற தொகைச் சொல்லினிடத்து எச்சச் சொல் உரியதும் ஆகும். 'உம்' - இதற்கு முற்றுப் பொருள் இல்லை; தொகைச் சொல்லுக்கு முற்றுப்பொருள் உண்டு. ஐவரும் வந்திலர் - இத்தொடரில் ஐவர்-தொகைச் சொல்; 'உம்' இடைச்சொல். ஐவர் என்பது பாண்டவர் ஐவர் என்னும் முற்றுப் பொருள் தரும்.

(எ-டு) பாண்டவர் ஐவரும் வரவில்லை - இத்தொடர் ஒருவர், இருவர் வந்தனர் என்னும் எச்சம்பொருள் தருவது காண்க. பத்தும் கொடாதே - இத்தொடர் சில கொடு என்னும் எச்சப் பொருள் தருவதும் காண்க.

முற்றும்மை எச்சப் பொருள்தருவது எதிர்மறைப் பொருள் தருமிடத்தில் தான்; உடன்பாட்டில் எச்சப்பொருள் வராது.

## சூத்திரம் 286

### *(ஏ-இதற்குச் சிறப்புவாதி)*

ஈற்றுநின்று இசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரளபு ஆகலும் உரித்தே

உரைநடையில் ஒருவர் பேசும் போது தொடரின் இறுதியின் நிற்கும் 'ஏ' என்றும் இடைச்சொல் தனக்குரிய இரண்டு மாத்திரை ஒலிக்காமல் ஒரு மாத்திரையாகக்குறுகி ஒலிக்கும். இது வழக்காற்றில் (நடைமுறையில்) உணரலாம். 'ஆகலும் உரித்தே' - என்றதனால் சில இடங்களில் இரண்டு மாத்திரையும் ஒலிக்கும்.

(எ-டு) 'கடல்போல் தோன்றலநாடிறந்தேரே' - ஏகாரம்

1. ஓரளபு இசைப்பது காண்க.
2. இருவர் உரையாடல் செய்யும்போது ஒருவர், பார்த்தேனே, பருகினனே என்னும்போது 'ஏ' ஒருமாத் திரை ஒலிப்பது காணலாம்

## சூத்திரம் 287

### *(உம், என - இடைச்சொற்கள்)*

உம்மை எண்ணும் எனவென் எண்ணும்
தம்வயின் தொகுதி கடப்பாடு இலவே

உம், என - இவை எண்ணிக்கையை உணர்த்தும் எண்ணிடைச் சொற்கள். இந்த இரண்டு இடைச் சொற்களும் ஈற்றில் தொகைச்

சொல் பெற்றும் பெறாமலும் வரும் என்பதாம். கடப்பாடு இல-கட்டாயம் இல்லை.

(எ-டு) 1. இசையினும், குறிப்பினும், பண்பினும் - இத்தொடரில் 'உம்' இடைச்சொல் தொகைச் சொல்பெறாமல் வந்தது.

2. நிலம் என, நீர் என, தீ என, காற்று என நான்கும் 'என' என்பது நான்கு என்னும் தொகைச் சொல்பெற்று வந்தது.

3. உயிர் என, உடம்பு என இன்றியமையா - இத்தொடரில் என என்பது தொகை பெறாமல் வந்தது.

## சூத்திரம் 288

*(எண்ணுப் பொருள்தரும் 'ஏ')*

எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக் குறித்து இயலும் என்மனார் புலவர்

சொல் தோறும் வாராமல் இடையே வந்தாலும் 'ஏ' இடைச்சொல் எண்ணுப் பொருள் தரும்.

(எ-டு) மலைநிலம் பூவே துலாக்கோல் - இங்கு 'ஏ' - இடைச் சொல் சொல்தோறும் வாராமல் இடையில் வந்தாலும் எண்ணுப் பொருள்தருவது காண்க. (மலையும் நிலமும் பூவும் துலாவும் - என விரியும்)

## சூத்திரம் 289

*(எனா-என்றா-இடைச்சொற்கள்)*

உம்மை தொக்க எனாவென் கிளவியும்
ஆவீறாகிய என்றென் கிளவியும் எண்ணுவழிப்பட்டன.

'உம்' என்னும் இடைச்சொல் விரியாமல் தொக்கு நின்ற 'எனா' - 'என்றா' ஆகிய இரண்டு இடைச்சொற்களும் எண்ணுப்பெருள் தரும்.

(எ-டு) நிலன் எனா, நீர் எனா எனவும்
நிலன் என்றா, நீர் என்றா எனவும்

வந்தவாறு கண்டுகொள்க. (நிலனும் நீரும் என்று) உம்மை விரியாமல் நிலன், நீர் என உம்மை தொக்கு எனா, என்றா என்னும் இடைச்சொற்கள் எண்ணுப் பொருள் தந்தன)

## சூத்திரம் 290

*(தொகை பெற்றே முடியும் எண்ணிடைச் சொற்கள்)*

அவற்றின் வருஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயி னாகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினும் தொகையின்றி நில்லா

மேலே கூறப்பட்ட 'எனா', 'என்றா' என்பனவற்றால் வரும் இறுதியும், பெயராகவே எண்ணப்படும் செவ்வெண் இறுதியும் 'ஏ' என்பதால் வரும் எண்ணிறுதியும் எந்த ஓர் இடத்தில் வந்தாலும் தொகைச் சொல் பெறாமல் நிற்கா.

(எ-டு) நிலன் எனா, நீர் எனா இரண்டும் (தொகை)
நிலன் என்றா, நீர் என்றா இரண்டும் (தொகை) - எனவும்
நிலம் நீர் என இரண்டும் எனவும், இரண்டு
என்னும் தொகை பெற்றே வந்தமை காண்க.

## சூத்திரம் 291

*உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார்*

எண்ணுப் பொருளில் வரும் 'உம்' என்றும் இடைச் சொல்லின்கண் வேற்றுமை உருபு தொக்குருவது விலக்கப்படாது; தொக்குவரும் என்பதாம்.

(எ-டு) யானை, தேர், குதிரை, காலாள் எறிந்தார் - இத் தொடரில் 'உம்' என்னும் இடைச்சொல்லும், ஐ என்னும் வேற்றுமை உருபும் ஒருங்கே தொக்குவந்தன. இவை, யானையையும், குதிரையையும், தேரையும் காலாளையும் என விரியும்.

## சூத்திரம் 292

### (உம்-உந்து)

உம்உந்து ஆகும் இடனுமார் உண்டே

ஒரு வினைமுற்றின் கடைசியில் நிற்கும் 'உம்' என்னும் இடைச்சொல் 'உந்து' என மாறுவதும் உண்டு. இது பெரும் பாலும் செய்யுளிலும் வரும்.

(எ-டு) நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து - இதில் கூப்யெர்க்கும் என இருக்கவேண்டியது பெயர்க்குந்து என வந்தது. பொருள் ஒன்றே.

## சூத்திரம் 293

வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா
நினையல் வேண்டும் அவற்றவற்று இயல்பே.

எண்ணிடைச் சொற்கள் பெயரோடு வருதலே அல்லாமல் வினைமுற்றோடு கூடிவரினும் எண்ணுப் பொருள்தரும் தம் நிலையில் மாறா. ஆங்கு அவ்வவற்றின் தன்மையை ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

(எ-டு) உண்டும் தின்றும் பாடியும் வந்தான் - என வினைமுற்றோடு 'உம்' வந்து எண்ணுப் பொருள்தந்தது.

உண்ணவென, தின்னவெனப் பாடவென வந்தான் என்று வினையோடு 'என' இடைச்சொல் வந்தது.

## சூத்திரம் 294

என்றும் எனவும் ஒடுவும் தோன்றி
ஒன்றுவழி உடைய எண்ணினுள் பிரிந்தே

என்று, என, ஒடு - இவ்விடைச் சொற்கள் ஒருவழித் தோன்றி எண்ணினுள் பிற வழியும் பிரிந்து சென்று பொருந்தும் இடமும் உடைய.

(எ-டு) 'வினை பகை என்றிரண்டின் எச்சம்' - எனவும்
கண்ணிமை நொடி என - எனவும்
பொருள்கருவி காலம் 'வினை இடனொடு ஐந்தும் - எனவும், அவ்விடைச் சொற்கள் ஓர் இடத்தில் நின்று, வினை என்று, பகை என்று, கண்ணிமை என, நொடி என, பொருளோடு, கருவியோடு....... எனப் பிரிந்து பிறவிடத்துச் சென்று சேர்ந்தவாறு காண்க.

## சூத்திரம் 295

அவ்வச் சொல்லிற்கு அவைஅவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல ஆயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே.

மேலே சொல்லப்பட்ட இடைச் சொற்கள், அவ்வவற்றிற்கு அவை அவை பொருள் எனக் கூறிப்பட்ட இயல்பின வாயினும், வினைச் சொல்லோடும் பெயர்ச் சொல்லோடும் தோன்றி வேறு பொருள் தருவனவாயும் அசையாயும் திரிந்து வந்தாலும் கொள்க.

(எ-டு) 'சென்றீ பெருமனின் தகைக்குநர் யாரோ' (ஓ)
எனவும், கலக் கொண்டேன் கள்ளென்கோ (ஓ)
எனவும், 'ஓ' - இடைச்சொல் ஈற்றசையாயும் எண்ணாயும் வந்தது கண்டு கொள்க. இவ்வாறே பிற இடைச்சொற்களும் வெவ்வேறு பொருளிலும் அசையிலும் வருமாறு காணலாம்.

## சூத்திரம் 296

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே

மேலே கூறப்பட்டனவே அல்லாமல் அவை போன்ற பிற வந்தாலும், அவற்றை முன் கூறப்பட்ட இலக்கண நெறிப்படி ஆராய்ந்து அமைத்துக் கொள்க. இச்சூத்திரம் இவ் இயலுக்குப் புறனடையாம்.

இன்ன இடைச்சொல் இன்ன பொருள் தரும் என்று ஆசிரியர் இவ்இயலில் கூறியதற்காக அச்சொல் அப் பொருள்தான் உணர்த்தும் என்று கொள்ளவதற்கில்லை; அது கூறப்பட்ட சார்பு, இடம், குறிப்பு ஆகியவை பற்றியே அதன் பொருள் உணரப்படும் என்பது அறிஞர் பூவராகம்பிள்ளை அவர்கள் தரும் விளக்கமாகும்.

*(தொடரும்)*

❋ ❋ ❋

# இயற்கையும் மாசுக்கட்டுப்பாடும்

ச. சாந்த நாகநாத சேதுபதி

*முன்னுரை :*

இக்கால மனிதன் விஞ்ஞான விந்தைகளால் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தாலும்; நவீன சாகுபடிகளும், செயற்கை ஆடை அணிகலன் களும், போக்குவரத்துச் சாதனங்களும் வீட்டு உபகரணப் பொருள் களும் புதிய புதிய நோய்களை மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் பஞ்ச பூதங்களுக்கும் பாதிப்பை உண்டாக்கி வருகிறது.

இந்த விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மனித உழைப்பை மிச்சப்படுத்தி, நேரத்தை மிச்சப்படுத்தி உற்பத்தியை பெருக்கினாலும் அவை சுற்றுச் சூழலை வெகுவாக பாதிக்கிறது.

இச்சுற்றுச்சூழல் பாதிப்பால் எந்த நோயையும் தடுக்கவல்ல நோய் எதிர்ப்பு சக்தி மனிதனுக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் குறைந்துவிட்டது. இதனால் நோய்க்கு ஏற்ற மருந்தைப் பயன்படுத்தி னாலும், அம்மருந்துகளே புதிய நோய்களை ஏற்படுத்துகின்றன.

பல ஆண்டுகள் பாடுபட்டு சரி செய்ய வேண்டிய பாதிப்பை தற்போது பூமி சுமந்துள்ளது. இந்தச் சுற்றுச் சூழலைச் சீர் செய்ய ஆண்டுக்கு 60,000 கோடி டாலர் செலவாகும் என்று பிரேசிலில் நடைபெற்ற உலகச் சுற்றுச் சூழல் கருத்தரங்கம் மதிப்பிட்டுள்ளது.

*வீட்டு உபகரணப் பொருள்களால் :*

மனித உடலுக்கு சரியானது 18° வெப்பநிலை தான். அதற்கும் குறைந்தால் 'நுரையீரல்' பாதிக்கப்படும். அத்தகைய பாதிப்பு நாம் பயன்படுத்தும் 'மின்விசிறி'களால் ஏற்படுகிறது. மேலும், வீட்டில் உள்ள

வெப்பக்காற்றை வெளியேற்றாமல் ஒருமித்த வகையில் உடலில் படியவைப்பதால் 'மூல நோயும்' உருவாகிறது.

குழல் விளக்கில் (Tube Light) புற ஊதாக்கதிர் வெளியாகிறது. இதனால் ஆண்டுக்கு 2% தோல் புற்று நோயால் பாதிக்கப்படு கிறார்கள்.

சூரியனில் இருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்களைத் தடுக்க 503 மைல் தொலைவில் வளிமண்டலத்தில் இயற்கை அமைத்துக் கொண்ட 'ஓசோன் படலம்' (Ozone layer) இன்று வீடுகளில் பயன்படுத் தும் 'குளிர்பதனப் பெட்டிகளில்' இருந்து வெளியாகும் 'குளோரோ புளோரோ கார்பன்' (CFC) எனும் வாயுவால் 2 கோடியே 70 லட்சம் சதுரகிலோ மீட்டர் பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பாதிப்பில் 6% பரப்பளவு இந்திய துணைக் கண்டத்தை நோக்கி உள்ளது.

இப்பாதிப்பால் சூரியகதிர் நேரடியாக இயற்கையையும், மனிதனையும் தாக்குகிறது. புற ஊதாக்கதிர் நேரடியாக மனித உடலைத் தாக்குவதால் 'தோல் புற்று நோயும்' 'கண் புரை' (Cataract) எனும் கண்ணில் சதை வளரும் நோயும் உருவாகிறது. கண்புரையை அறுவை சிகிச்சை செய்தாலும் மறுபடியும் வளரும் அபாயத் தன்மை கொண்டது. நாளடைவில் 'விழி லென்ஸ்' வெளுப்படைந்து கண்பார் வையை இழக்க வேண்டும். மேலும் 'அண்டார்டிக்கா' பெருங்கடலி லுள்ள பனிப் பாறைகள் உருகி நிலப்பரப்பை மூழ்க வைக்கும் அபாயமும் திகழும்.

35 கிராம் குளோரின் $6 \times 10^{23}$ குளோரோ புளோரோ கார்பனை உண்டாக்குகிறது. ஒரு குளோரின் அணு ஒரு லட்சம் ஓசோன் அணுவை ($O_3$) சிதைக்கும்.

"வெப்ப உள்ளீடற்ற நிகழ்வு மற்றும் எதிர் காந்த விளைவு" (Adiabatic and demagnetisation) மூலம் குளோரோ புளோரோ கார்பன் குளிர்பதனப் பெட்டியில் வெளியாவதை தடுக்க முடியும்.

"மின்னல்களால்" பிராணவாயு $O_2$ ஓசோன் வாயுவாக $O_3$ ஆக மாறும் அதாவது 50,000 மின் அழுத்தத்தால் $O_2$ H $O_3$ ஆக மாறுகிறது.

"விரலியை வெல்லும் மூலிகை" என்று அழைக்கப்படும் துளசி ஓசோன் வாயுவை $O_3$ வெளியிடுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

*விவசாயத்தில் :*

உலகில் உள்ள தாவரங்களில் 20 வகையான தாவரங்கள் மட்டும் நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றுள்ளன.

1950களில் மருந்துக்கு கட்டுப்படாத பூச்சிகள் 7 மட்டுமே இருந்தன. ஆனால் தற்போது 575 மருந்துக்கு கட்டுப்படாத பூச்சிகள் உள்ளன. விவசாயத்தில் பயன்படுத்தும் "இரசாயன உரங்கள்" மூலம் பூச்சிகள் உருவாகிறது என்று "இந்தியன் அக்ரிக்கல்சுரல் ரிஸர்ச் இன்ஸ் டியூட்டின்" ஆய்வு நிருபித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் மட்டும் 50,000 டன் பூச்சி மருந்து விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக் கிறது. மருந்து தெளிப்பதை உடனே நிறுத்தினாலும் கூட 50 ஆண்டுகளுக்கு நச்சு தன்மை மண்ணில் படிந்து கிடக்கும்.

தற்போது ஆந்திர பருத்தி விவசாயத்தை அழித்துவரும் "புளூட்டோனியா" எனும் மருந்துக்கு கட்டுப்படாத பூச்சி இரசாயன உரங்களால் உருவானவைதான். மேலும் இரசாயன உரங்களால் "விவசாயிகளின் நண்பன்" என்று அழைக்கப்படும் மண்புழுக்களும் நன்மை செய்யும் பூச்சிகளும் அழிந்து வருகிறது.

சாகுபடியில் இலை அதிகம் பெற மட்டுமே ''யூரியா'' பயன்படுத்த வேண்டும். (உதாரணமாக முட்டைகோஸ் மற்றும் கோஸ் மற்றும் வாழை இலை. ஆனால், தற்போது விவசாயத்தில் யூரியா எல்லா வகையான உற்பத்தியிலும் பயன்படுத்தப்படுகிறது. யூரியா மனித உடலில் அதிகம் சேர்வதால் கண்பார்வை மற்றும் நுரையீரல் பாதிக்கப்படும். வெடித்த திராட்சை பழத்தில் இரசாயன உரம் படிவதால் அதை உண்பவர்களுக்கு பக்கவாதம் ஏற்படும். காசிதும்பை எனம் மூலிகை பக்கவாதம் போக்கும் ஆற்றல் பெற்றது.

மனிதர்கள் பயன்படுத்தி வெளியிடும் சோப்பு கலந்த நீர் பயிர்களில் பாய்வதால் பயிர் மலட்டுத்தன்மை அடைகிறது.

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 20க்கும் மேற்பட்ட தோல் பதனிடும் போது உருவாகும் நச்சு தன்மை கொண்ட வேதிக் கழிவுகள் விளைநிலங்களை பாழடிக்கிறது. சுற்றியுள்ள கிணறுகளையும் நஞ்சாக்கிவிடுகிறது.

தாய்லாந்து, சோமாலியா போன்ற நாடுகளை பஞ்சக்கடாக்கிய "இறால் பண்ணை" இன்று இந்தியாவில் நடுவம் கொண்டுள்ளது. இறால் மீன்களின் கழிவு நிலத்தில் பாய்வதால், அங்கு சிறு புல் பூண்டுகளைக் கூட முளைக்கவிடாது. சுற்றியுள்ள நிலத்தடி நீரை உப்பாக்கிவிடும். அதைவிட நான்கு ஆண்டுகளுக்கு பின் "இறால் பண்ணைக்கு" பயன்படுத்திய நிலத்தில் மீண்டும் இறால் மீன்களை கூட வளர்க்க முடியாது. தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை, நாகை மாவட்டங்களில் இறால் பண்ணை ஆக்கிரமிப்பு அதிகம் உள்ளது.

இத்தகைய பண்ணைகளை கட்டுப்படுத்துவதன் மூலமும், தொழிற்சாலைகளில் கழிவுகளை மறுசுத்திகரிப்புக்கு வலியுறுத்துவதன் மூலமும், பசுந்தாழ் உரங்கள், கால்நடைக் கழிவுகள் போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்துவதன் மூலமும் விவசாயத்தில் ஏற்படும் சீரழிவுகளை தடுக்க முடியும்.

*தண்ணீரில் :*

40 நாள் தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் "மலேரியா நோயை" உண்டாக்கும் கொசுக்கள் உற்பத்தியாகும் அந்த கொசுக்களுக்கு ஒன்றரை மைல் தூரம் வரை இரத்தவாடை தெரியும். பொதுவாகவே கொசுக்கள் மூலம் டைப்பாயிடு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் உண்டாகும். பரவும் கொசுக்கள் மூலம் ஆண்டுக்கு 8லட்சம் நபர்களுக்கு "குஷ்டம்" பரவுவதாக தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "வில்வம்" எனும் மூலிகை குஷ்டத்தை குணப்படுத்தும் ஆற்றல் பெற்றது.

கொசுக்கடியில் இருந்து விடுபட மருந்து சுருள் - பசை - பட்டை என்று எத்தனையோ வகையானவற்றை பயன்படுத்துகிறோம். பாதி கொசு இறந்துவிடுகிறது. ஆனால் அவைகளின் புகையும் நொடியும் மனிதனை தாக்கும். தாவரவியல் நிபுணர் சி.சிவராம் ரெட்டி, "ஜெரேனியம்" மற்றும் "சைனாபுல்" என்ற இரண்டு வகையான தாவரங்களை கொண்டு உருவாக்கிய "சிட்ரோஸாசைஸ்" என்ற எலுமிச்சை மணம் வீசும் செடி, பக்க விளைவுகள் மனிதனுக்கு வராமல் 10 அடி சுற்றளவில் கொசுக்களை வரவிடாது என்கிறார்

டைப்பாய்ட், காலரா மற்றும் மலேரியா நோய்களைத் தடுக்க குளோரின் கலந்த நீரை குடிக்கிறோம். அந்த குளோரினை தண்ணீரில் கலக்கும் போது "கால்சியம் குளோரைடு" மற்றும் "ஹைட்ரோ குளோரிக் அமிலமாகவும்" மாறுகிறது. இதனால், குடிக்கும் நமக்கு "குடற்புண் நோய்" (அல்சர்) வருகிறது. "குப்பை மேனி" எனும் மூலிகை மலேரியாவை பக்க விளைவுகள் இல்லாமல் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றது.

குளிப்பதற்குப் பயன்படுத்தும் சோப்பில் உள்ள சோடியம் மனிதனுக்கு "தோல் புற்று நோயை" ஏற்படுத்துகிறது. மனிதன் பயன் படுத்திய சோப்புகலந்த நீரை மாடுகள் குடிக்க நேர்ந்தால் "காசநோய்" ஏற்படும். மாடுகளின் உடலில் தென்படும் முள் போன்ற வெளிப்பாடு காசநோயின் அறிகுறியாகும்.

துணிகளுக்குச் சாயம் போடும் தொழிற்சாலைகளின் கழிவு நேடியாக ஆற்றில் கலக்கப்படுவதாலும், சர்க்கரை ஆலையில் இருந்து வெளியாகும் கழிவுப்பாகு தண்ணீரில் கலந்தவுடன் பிராண வாயுவை $O_2$ உறிஞ்சிவிடுவதாலும் மீன், தவளை போன்ற நீர் வாழ் உயிர் இனங்கள் இறந்துவிடுகின்றது. உலகில் உள்ள 3,900 இன தவளைகளில் 205 வகையான தவளைகள் இந்தியாவில் உள்ளன. தமிழகத்தில் நீலகிரி பகுதியில் ரசாயன உரங்களாலும் தவளைகள்

மடிந்துவிடுகின்றன. அமெரிக்க மருத்துவ கழகம் தோல் புற்று நோய், காசநோய் ஆகியவற்றை தவளைகளை கொண்டு குணப்படுத்த முடியும் என்று கண்டுபிடித்துள்ளது.

அணுமின் நிலையத்தில் இருந்து வெளியாகும் சாம்பல், கச்சா எண்ணெய் சரக்கு கப்பல் மூழ்குவதாலும், ஜப்பான் போன்ற நாடுகள் மது, மருந்துக்கு பயன்படுத்திய கண்ணாடி குவளைகளை மறுபடியும் பயன்படுத்தாமல் நொறுக்கி டன் கணக்கில் கடலில் வீசுவதாலும் "மீனவ நண்பன்" என்று அழைக்கப்படும் டால்பின் மீன்களும், ஆஸ்துமா மற்றும் இதயத்தை வலுப்படுத்த மருந்தாக பயன்படும் "கடல் குதிரை" என்று அழைக்கப்படும், குதிரை வடிவிலுள்ள மீன்களும் அழிந்து வருகின்றன என்று "மத்திய உப்பு கடல் ரசாயன ஆராய்ச்சி நிறுவனம்" ஆய்ந்துள்ளது.

*நிலத்தில் :*

மனித இனம் இரண்டு மடங்கு பெருகி வருகிறது. ஆனால், நிலம் இருமடங்கு குறுகி வருகிறது. காடுகளை அழிப்பதன் மூலம் மண்வளமும், மழைவளமும் வெகுவாக பாதிக்கப்படுகிறது. இதனால் பூமியின் மேல்மட்டம் லெகுவாக இருக்கும் பகுதியில் 5 ஆயிரம் கிலோமீட்டர் அடியில் கொதிக்கும் நெரும்பு குழம்பு முதலில் வாயுவாகவும், சில ஆண்டுகளில் புகை மற்றும் சாம்பலாகவும், நில நடுக்கமாகவும் இறுதியில் எரிமலையாக வெடித்து வெளியேறுகிறது. காடுகள் பெரும்பாலும் காகித தொழிற்சாலைகளுக்காக தான் அழிக்கப்பட்டு வருகிறது.

"யூக்கலிப்பட்டஸ்" எனும் மரம் மண்வளத்தைன் காத்தாலும், மருத்துவத்திற்குப் பயன்பட்டாலும் அவை நிலத்தடி நீரை உறிஞ்சும் தன்மை கொண்டவை.

மின்னணுவியல் சாதனம் தாயரிக்கப் பயன்படும் "சிலிக்கான்" என்ற பொருள் "சிலிக்கேட்" எனும் அபூர்வ மண் வகையில் இருந்து பிரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மரக்காணம் மற்றும் வேதாரண்யம் தாலுக்காவை சேர்ந்த வண்டுவாஞ்சேரி கிராமத்தின் சுற்றுப்பகுதியில்

சிலிக்கேட் மணல் 3 அடி ஆழம் 12 அடி ஆழம் வரை கிடைக்கிறது. இந்த சிலிக்கேட் மணல் மழைநீரை அடுத்த அடுக்கில் உள்ள களிமண்ணில் உள்ள உப்பு நீருடன் கலக்காமல் பாதுகாக்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேலாக மணல் எடுக்கப்பட்டு வருவதாலும், மீண்டும் அக்குழிகளில் வேறு மணலை வைத்து நிரப்பாததாலும் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு குடி நீருக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது மட்டுமல்லாமல், இயற்கை சமநிலை கெட்டு வருகிறது (Ecological Imbalance) என்று "புவியியல் மற்றும் சுரங்கத்துறை" எச்சரித்துள்ளது.

நைலான், பாலியஸ்டர் போன்ற நுண்ணிழை தயாரிக்கப் பயன்படும் "பாலிகார்பைட் ரெசின்" நிலத்தில் ஆண்டுக்கு 10,000 டன் புதைந்து வருகிறது. அதே போல் சாலைகள் அமைக்க பயன்படுத்தும் பெட்ரோலின் வேதிப் பொருளான "தார்"களால் மழைபெய்யும் போது பெர்குலேசன் விளைவு (Perculation Effect) ஏற்பட்டு பூமியில் கருப்பு அமிலத்தை படிய வைக்கிறது. இதனால் நிலத்தடி நீர் நச்சு படுவதுடன் நில்லாமல், நீரை அடியில் கொண்டு போகிறது. மதுராந்தகம் ஏரியை அழகுபடுத்துவதற்காக போடப்பட்ட தார் சாலைகளால் முன்பு 5 அடியில் கிடைத்த நிலத்தடி நீர் இன்று 200 அடியில் தான் கிடக்கிறது. ஆக சாலைகள் அமைக்கும் போது "மேக்டம் அமைப்பு" (Magdum System) பயன்படுத்துவதன் மூலம் "தார்" சாலைகளால் பூமியின் கரும்பு அமிலம் படர்ந்து நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதை தடுக்கலாம்.

*காற்றில் :*

குப்பைகளை எரிப்பதால் "கரியமிலவாயு" (Carbondioxide) உண்டாகும். இதனால் தவாரம் மூலம் ஒளிச்சேர்க்கை (Photosynthesis) அதிகம் நடைபெறும் மழை வரும். ஆனால், கரியமில வாயுவை பிளாண்டோ (Planto) எனும் கடல்பாசி வாங்கிக் கொண்டு "ஹைட்ரஜன் சல்பைடு" எனும் நச்சு வாயுவை வெளியிடுகிறது. அக்கடல் பாசிகளை உண்ணும் மீன்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் அம்மீன்களை உண்ணும் மனிதர்களை புற்றுநோய் தாக்கும்

என்று ருஷ்ய விஞ்ஞானி கண்டுபிடித்துள்ளார். "நித்தியகல்யாணி" எனும் மூலிகை புற்றுநோயை குணப்படுத்தும்.

வாகனங்களில் வெளியாகும் கரியமிலவாயுவும் அதே பாதிப்பை ஏற்படுத்தும். கரியமிலவாயுவால் இயற்கை மட்டுமில்லாமல், ஹைத்ரபாத்தில் உள்ள சார்மினால் கோபுரமும் ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலின் பொலிவும் மாற்றம் பெற்று வருகிறது. ஈயக்கலப்பு இல்லாத பெட்ரோலாக மாற்றும் "கேடலிடிக் கன்வர்டர்" எனும் சிறு இயந்திரத்தை வாகனங்களில் பயன்படுத்து வதன் மூலம் கரியமிலவாயுவை 90% பிராணவாயுவாக மாற்றமுடியும்.

பெட்ரோலைக் கொண்டு 6 லட்சம் வேதிப்பொருள்கள் தயாரிக் கப்படுகிறது. ஐசோ-மீத்தேன் வாயுவை தயாரிக்கும்போது ஒரு சிட்டிகை பெட்ரோல் வருய 8000 சதுரகிலோமீட்டர் பிராணவருய மண்டலத்தை தாக்குகிறது.

அனல் மின் நிலையங்களில் 23 மில்லியன் டன் நிலக்கரி எரிக்கப்பட்டால் 74 மில்லியன் டன் கரியமிலவாயும் 1, 90, 000 டன் சல்பர்டைய் ஆக்ஸைடுவும், 25000 டன் நைட்ரஜன் ஆக்ஸைடுவும் வெளியேறி காற்கு மண்டலத்தை வெகுவாக மாசுபடுத்துகிறது. இப்படி மின்நிலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வெளியாகும் நச்சு வாயுக்கள் அமில மழையை உண்டாக்குகிறது.

விஞ்ஞான கண்டுபிடிப்பான நைட்ரஜன் குண்டு வெடித்தால் $3x10^{-9}$ நொடியில் (3 nano-second) ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள அனைத்து பொருளும் ஆவியாகிவிடும். $4x10^{-9}$ நொடியில் (4 nano Seconds) 600 கிலோ மீட்டர் வரை அதே பாதிப்பை ஏற்படுத்தும்.

50 ஆண்டுகளுக்கு முன் ஜப்பான் நகரங்களான கிரோசிம்மா, நாகசாகியில் வெடிக்கப்பட்ட ஹைட்ரஜன் குண்டுகளால் இன்று பிறக்கும் குழந்தைகளில் பெரும் பாலானவை எலும்பு பலம் அற்று பிறக்கின்றன. அதாவது குழந்தையை தூக்கினால் எலும்புகள்

நொறுங்கிவிடும் அபாயத்தன்மை கொண்டது.

*முடிவுரை :*

"சுண்டக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம்" என்பார்கள். அப்படி ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்பும் வெவ்வேறு வகையான பாதிப்பை உண்டு பண்ணுகிறது. அந்த பாதிப்பைக் கண்டுபிடித்து சரிசெய்ய விஞ்ஞான அறிவு விரிவடைகிறது; கண்டுபிடிக்கப்படுகிறது.

சரியான விஞ்ஞான கண்டுபிடிப்பானாலும் அவற்றைத் தொலை நோக்குடன்,சோதனை செய்து இயற்கைவளம், சுகாதாரம் பாதிக்கப்படாது என்று உறுதி செய்யப்பட்டால் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

நீரும், காற்றும், நிலமும் மாசுபடுவதால் பொருளாதார ரீதியில் ஆண்டுக்கு 24,500 கோடி இழப்பையும் சுகாதார ரீதியில் 20 லட்சம் உயிர்களை ஒவ்வொரு ஆண்டு பலி கொடுத்து வருகிறோம்.

பூதாகரமான இச்சூழல் வளர்ந்து சுற்றுப்புறச் சூழலை சீரழித்தால் சமூக ரீதியில் நாம் அக்கொடுமைகளை அனுபவித்து தீரவேண்டும்.

இப்படி ஏற்படும் பாதிப்பைப் பழுது பார்க்கவும் இனி ஏற்படாமல் தற்காத்து சுற்றுச் சூழலைப் பாதுகாப்பவும் ஒவ்வொரு தனிநபரும், நாளை நம் தலைமுறைக்கு வரும் பாதிப்பு என்று சுற்றுச் சூழலை பாதுகாக்க முன்வரவேண்டும். அமைப்பாக செயல்படவேண்டும்.

இயற்கை வளத்தை இனிதாக்க வாருங்கள்.

# நாட்டார் நாடகங்களின் அமைப்பும் உத்தியும்

ந. விஜயசுந்தரி

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் நாட்டார் நாடகங்கள் எனப்படும். நாட்டுப்புறங்களில் வாழ்ந்து வரும் மக்களைச் சிறப்பாக நாட்டார் என்று குறிப்பிடுவர். எனவேதான் வாய்மொழியாக நாட்டுப்புறமக்கள் வழங்கி வந்த பாடல்கள் நாட்டார் இலக்கியம் எனப்படும். தொடக்கக் காலத்தில் பல வகையானக் கூத்துக்களும், ஆடல்களும் நிகழ்த்தப்பட்டன. இத்தகைய தெருக்கூத்துக் கலையின் வளர்ச்சி பெற்ற நிலையில் நாட்டார் நாடகங்கள் விளங்குகின்றன.

## நாட்டார் நாடகங்கள் உட்பொருள் :-

நாட்டார் நாடகங்கள் கிராமங்களில் நிகழ்த்தப்பட்டதால் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலிருந்தும், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம் போன்ற புராணங்களிலிருந்தும் சிறுசிறு நிகழ்ச்சிகள் எடுக்கப்பட்டு அவை சிற்சில மாற்றங்களுடன் நாடகங்களாக எழுதப்பட்டன. அக்காலத்தில் நாட்டுப் புறங்களில் வழங்கி வந்த கதைகள் பலவும் நாடகக் கருக்களா யின. சோழன், பாண்டியன் போன்ற மன்னர்களின் வாழக்கை வரலாறுகளும் நாடகங்களாகக்கப்பட்டன.

கிராமப்புறங்களில் ஒரு சில கதைகளையே மக்கள் அறிந்திருந்த தால், மீண்டும் மீண்டும் அவற்றையே வெவ்வேறு ஆசிரியர்கள் நாடகங்களாக எழுதினர். புராணக் கதைகளில் மிகப்பெரிய அளவில் பல்வேறு நாடகங்களாக ஆக்கப்பெற்ற கதை அரிச்சந்திரன் கதை யாகும். அரங்கப்பிள்ளைக் கவிராயரின் அரிச்சந்திர விலாசம், பரசுராமக்கவிராயரின் அரிச்சந்திர விலாசம், முத்துசாமிப்பிள்ளையின் அரிச்சந்திர விலாசம், சிவசாமி எழுதிய அரிச்சந்திரன் நாடகம்,

நரசிம்மையாரின் அரிச்சந்திரோபாக்யான நாடகலங்காரம் ஆகியவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் சிறு தெய்வங்களை வழிபடும் மரபு உண்டு. இவர்கள் மண்ணில் வாழ்ந்து பின் விண்ணுலகை எய்திய தேவர் களைப் போன்றோர். மதுரைவீரன், சுடலை மாடன், காத்தவராயன், ஆரவல்லி போன்றோர் கதைகள் நாட்டார் நாடகங்களாக எழுதப்பட்டன.

## நாட்டார் நாடகங்களின் பெயர்கள் :

நாடகம், விலாசம், சபா, அலங்காரம், சரித்திரம், வாசகப்பா, சரித்திரப்பா ஆகிய பல பெயர்கள் நாட்டார் நாடகங்களுக்கு வழங்கப் படுகின்றன. இவை பெயரளவிலேயே வேறுபட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட தலைவன் அல்லது தலைவியின் புகழைச் சிறப்பித்துப் பேசும் நாடகம் விலாசம் எனப்பட்டது. அரிச்சந்திர விலாசம், இரணிய விலாசம், சகுந்தலை விலாசம், ஆகியவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். இடையிடையே வசனங்கள் விரவப் பெற்று வாசப்பாக் களாலாகிய நாடகங்கள் வாசகப்பா நாடகம் எனப்படும். தேவசகாயம் பிள்ளை வாசகப்பா இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. நாடகத் தலைவனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது சரித்திரப்பா ஆகும். மனுநீதிச் சோழன் சக்கரவர்த்தி சரித்திரப்பா, சாரங்கதாரா சரித்திரப்பா போன்றவை உதாரணங்கள் பரேர், வீரம், வெற்றிச்சிறப்பு ஆகிய வற்றை எடுத்துக் கூறுவது சண்டை நாடகம் எனப்படும். பீஷ்மர் சண்டை நாடகம் கூறும். மாலையிட்ட நாடகம் என்பது எல்லோராலும் படிக்கத் தகுந்தது. தலைவனும், தலைவியும் மணம்புரிந்து கொள்ளும் கதையமைப்பு உடையது. சுந்தரி மாலையீடு நாடகம் சிறப்பு வாய்ந்தது. பிரம்மாண்டமான காட்சியமைப்பை மேடையில் கொண்டது சபாநாடகம் எனப்படும். அப்பாவுப் பிள்ளையின் நூதன பவறேந்திர சபா, பத்மினி சபா ஆகியவை சிறப்பு வாய்ந்தவை. மேலும் நல்லதரங்கரன் நாடகம், தமயந்தி நாடகம் என நாடகம் என்று முடியும் நாடகங்கள் எழுதப்பட்டன. பின் பெயர்கள் எதையும்

கொள்ளாமல் நேரடியாக உட்பொருளை உணர்த்தும் நாடகங்களும் உண்டு. பம்மல் சம்பந்த முதலியாரின் இருசகோதரிகள், பரிதிமாற் கலைஞரின் கலாவதி இவற்றைக் குறிப்பிடலாம்.

## நாட்டார் நாடகங்களின் கட்டமைப்பு :

இந்நாடகங்கள் தொடக்கம் முதல் இறுதிவரை சீராகச் செல்லும். சொல்லுமளவிற்குப் பெருஞ்சிக்கல் எதுவுமிராது. இடவொருமை, காலவொருமை, செயலொருமை எதுவுமில்லை ஒரு நாடகம் ஐந்து சந்திகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று மரபும் காணப்பெற வில்லை. முடிவு இன்பவியலாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் முக்கியத்துவம் காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இந்நாடகங்கள் ஒரு மரபைப் பின்பற்றுகின்றன. காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து, விநாயகர் வருகை, கட்டியங்காரன் வருகை, அரசன் தேச விசாரணை செய்தல், நடனமாதர் ஆடல் என வரிசையாக நிகழ்ச்சிகள் எல்லா நாடகங்களிலும் காணப் பெறுகின்றன. காப்புச் செய்யுளில் விநாயகரை நூல் வெற்றி பெறுவதற்கு வேண்டுவர். பின் அவையடக்கம், ஆக்கியோன் குறிப்பு, தோடையம், மங்களம் ஆகியவை தொடர்ந்து பாடப்பெறும் சில நாடகங்களில் நூல் பற்றிய விளக்கமும் பாடலாக இடம்பெறும். காத்தவராயன் சண்டை நாடகத்தில் விநாயகர் வருகிற விதம் இவ்வாறு புனைந்துரைக்கப்படுகிறது.

*"நற்றவக் காத்தவராயன் நாடகமதை நடத்த*
*அத்திமா முகவன்தானும் அன்புடன் வருகின்றாரே"*

தொடர்பவன் கட்டியங்காரன். சில நாடகங்களில் இவனுக்கும், விநாயகருக்கும் இடையே நகைச்சுவை உரையாடல் நடைபெறும். பின் திருமகள் வருவாள், பின் மோகனும், மோகனியும் கதை நிகழப்போவது குறித்து.

## பாத்திர அறிமுகம் :

நாட்டார் நாடகங்களை மக்கள்முன் நடிக்கையில் சில குறிப்பிட்ட பாத்திரங்களே மீண்டும் மீண்டும் வேடத்தை மாற்றிக் கொண்டு

டையில் தோன்ற வேண்டும். அரசனுக்கென்று ஒரு குறிப்பிட்ட ஆடையலங்காரம் உண்டு. ஒரு காட்சியில் அரசனாகத் தோன்றியவன்; மூன்றவாது காட்சியில் சாதாரணக் குடிமகனாகத் தோன்ற வேண்டும் எனில் அவன் தோற்றத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். தொலைவிலிருந்து காணும் மக்களுக்கு இவன் இன்னார் என்பதும் அடையாளங் காணப்பட வேண்டும். எனவே பாத்திரங்கள் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்ளும் முறை தோன்றியது.

## நாட்டார் நாடகங்களில் உத்திகள் :

நாடக நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி, சிக்கல்களை ஏற்படுத்தி, அவற்றிற்குத் தீர்வையும் கொடுப்பதற்காக ஆசிரியர்கள் நாடகங்களில் பல உத்திகளைப் பின்பற்றுகின்றனர். சில, காலச் சூழலுக்குப் பொருந்தியும், சில கதை வளர்ச்சிக்கு மாறுபட்டும் அமையும்.

## காட்சிமாற்ற அறிவிப்பு :

நாட்டார் நாடகங்களில் களப்பிரிவுகள் இல்லையென்றாலும் மேடையில் நடிக்கப்படும்போது ஒரு காட்சி முடிந்து, இன்னொரு காட்சி தொடர்வதற்கான அறிவிப்பு செய்யப்படும். கட்டியங்காரன் தோன்றி, காட்சி மாற்றத்தை அறிவிப்பது ஒன்று, மற்றொன்று ஆசிரியரே பொது விருத்தம், பொது வசனம் ஆகியவற்றின் மூலம் காட்சி மாற்றம், கதை வளர்ச்சி, பாத்திர வருகை ஆகியவற்றை அறியச் செய்வது. சில நாடகங்களில் கட்டியங்காரனும் அறிமுகம் செய்யவில்லை. ஆசிரியரும் குறுக்கிடவில்லை. ஒரு இடைப்பாடல் மூலம் காட்சி மாற்றத்தைத் தெரிவித்தனர். உதாரணமாக "ஏணியேத்த" நாடகத்தில், மதுரையில் ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்க, அதை உடனே அத்தினாபுரத்திற்கு ஒரு இடைப்பாடல் மாற்றுகிறது.

*"அருமையா யேணி அல்லி செய்திருக்கப்*
*பெருந்திரு மாது பிரானேசனைக் கேட்பான்"*

என்பது அப்பாடல்.

## உணர்ச்சி மாறுபாட்டு அறிவிப்பு :

நாட்டார் நாடகங்களில் பாடல்களுக்கு மட்டுமின்றி அவற்றின் இராகங்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. நாடகம் முழுமையும் பல்வேறு வகைப்பட்ட உணர்வுகள் கலந்து வரும். அத்தகைய உணர்வு மாற்றங்களைப் பாடல்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தினர். தையார் சுல்தான் நாடகத்தில் வணிகப் பெண்ணொருத்தி பேறுகால வேதனையுற்றுத் துடிக்கிறாள். அதை ஆதிதானம், செஞ்சுருட்டி இராகம் அமைந்த பாடலில் காட்டிய நாடகாசிரியர், குழந்தை பிறந்ததும் அம்மகிழ்ச்சியைச் சார்பு தாளம் கொண்ட அடானா இராகத்தில் காட்டுகிறார்.

## நாட்டார் பாடல்களில் இசை :

நாட்டுப் புற ஆட்டங்களின் வளர்ச்சி நிலையாக நாட்டுப்புற நாடகங்கள் வளர்ந்தன. ஆட்டங்களில் முன்பாட்டாளர், பின்பாட்டாளர் என இசைப்பாடலை எல்லோரும் இசைத்தனர். நாட்டார் நாடகப் பாடல்களிலும் இதே நிலைதான் நிலவியது.

*கூட்டம் ரொம்பக் கூடிருச்சு - நம்ம*
*ராசா ராணீ கூத்துப் பாக்க*
*அறாரொம்பக் கூடிருச்சு - ஏனன்னானே நம்ம*
*ஆட்டம் பாட்டக் கேக்குறதுக்கு*
*னானை னன்னானே*
*"ஏலோ ஏலோலோ ஏலேலோ - ஏலோ ஏலேலோ*
*ஏலோ ஏலேலோ ஏலேலோ ஏலேலோ - ஏலோ ஏலேலோ"*

இவ்வாறு இசைக்குறிப்புகளுடன் பாடல்கள் இசைக்கப்பட்டன.

ஒரு பாத்திரம் தொடர்ச்சியாகப் பாடுவதைவிட பாத்திரங்கள் மாறிமாறி பாடும் மரபு பெரிதும் வரவேற்கப் பட்டது. இவற்றைத் 'தாக்கப்பாடல்' என்றனர். அடியளவு, சீரளவு ஒத்துவராத பாடல்களும் உண்டு. எதுகை, மோனை இல்லாமலும் பாடல்கள் இசைக்கப் பெற்றன. சீர்குறையும்போது சொற்களை நீட்டிப் பாடினர். பெரும்பாலும் அடிகளின் இறுதி ஒத்த ஒலியிறுதிச் சொற்களால் முடிகின்றன.

வெறும் ஒலியைக் கொண்டு பாடல் இயற்றப் பெற்ற தன்மையும் உண்டு. உதாரணமாக ஸ்ரீ வேங்கடப் பெருமாள் நாடகத்தில் ஒரு பாடல்,

*டேயலோரா டையோ டேயோ*
*டேயலோரா டையோ டேயோ*
*அண்ணன் மாறே அடுக்கான் வாருங்காள்*
*சிவனிருக்கிற முடுக்கைப் பாருங்கள்*

என்று தொடர்கிறது.

எனவே நாட்டார் நாடகம் பாடல்களில் பொருளைவிட ஒலிக் குறிப்புகளுக்குத்தான் அதிக முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது எனலாம்.

## சமூக நாடகங்களின் தோற்றம் :

புராணம், இதிகாசம், வரலாறு, கற்பனை என்று நடைமுறை வாழ்க்கைக்கு அப்பாற்பட்டே நாடகங்கள் எழுதப்பட்டு வந்த காலத்தில் முதன் முதலாக நாட்டார் நாடகங்கள்தான் சமூகக் கருத்துக்களை உள்ளடக்கங்களாகக் கொண்டன. நாடக உலகில் இதை ஒரு பெரும் திருப்பு முனையாகக் கொள்ளலாம். புராணக் கதைகளை எழுதினால் கூட அவற்றை சமூகக் கண்ணோட்டத்துடன் அணுகும் முறை வருவானது. இவ்வகையில் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது தேவசகாயம் பிள்ளை வாசகப்பா ஆகும். இக்கால கட்டத்தில் பாட்டும், சுவடும் இணைந்து இயற்றப் பெற்ற சவிட்டு நாடகங்கள் தோன்றின. சவிட்டு என்பதற்கு சுவடு என்று பொருள். இவற்றில் விருத்தப்பாக்களும், வசனமும் மிகுதியாக இடம் பெற்றன.

## சமூக நாடகங்களில் உரையாடல் :

சாதாரணமாக நாம் நடைமுறையில் பயன்படுத்தும் வசனங்களோ இவற்றில் காணப்பட்டன. உதாரணமாக டம்பாச்சாரி விலாசம் என்னும் நாடகத்தில் ஒரு உரையாடல் பகுதி.

*டம்பாச்சாரி :*

நமது சீமை கோச்மெனும் மற்றக் கோச்மேன்களும், குதிரைக் காரர்களும் தங்கள் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கிறார்களா?

*வேலைக்காரன் :*

ஐயா! வெகு ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். கொள்ளைச் சுற்றிக் கொண்டு போகிறதிலும் வாங்கினப் புல்லைப் பக்கத்து வீட்டுக் குதிரைக்காரனுக்கு வீற்றுப் போடுகிறதிலும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறார்கள்.

## நாட்டார் நாடகங்களில் காணப்பட்ட மரபு மாற்றங்கள் :

1. தெருக்கூத்து நாடகங்களில் தேச விசாரணைப் பகுதியில் மன்னன் வினாக்கள் கேட்கும்போது முதலமைச்சர் உடனடியாக பதிலுரைக்கும் மரபு காணப்பட்டது. இம்மரபு மாறி நாட்டார் நாடகங்களில் மன்னன் வினா கேட்பது மட்டும் இடம்பெற்றது. காலப்போக்கில் இந்த தேச விசாரணைப்பகுதி முற்றிலும் அழிந்தது.
2. கட்டியங்காரன் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் போது "பராக்கு" என்று இறுதியில் கூறும் மரபு தோன்றியது.
3. காட்சி மாற்றங்களைக் குறிக்கப் பிற்காலத்தில் பொது வசனப்பகுதி இணைக்கப்பட்டது.
4. புராண வரலாற்றுக் கற்பனைக் கதைகளை விடுத்து சமூகக் கதைகள் நாடகங்களாக்கப்பட்டன.
5. புராண நாடகப் பாத்திரங்களைத் தவிர மற்றவற்றிற்குப் பண்பு அடிப்படையில் பெயர்கள் சூட்டப்பட்டன.
6. பாத்திரங்களின் பண்பு நலன்கள் அவ்வளவாகச் சித்திரிக்கப் படவில்லை.

## அடிக்குறிப்பு :

1. டாக்டர் ஏ.என் பெருமாள், தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு ப. 89
2. வீரபத்திரன், ஏணியேத்த நாடகம் - ப. 36
3. கே. ஏ. குணசேகரன், தமிழ் நாடகமும் சங்கரதாஸ் சுவாமிகளும் ப. 80
4. டாக்டர் ஏ.என். பெருமாள், தமிழ் நாடகம் ஓர் ஆய்வு ப. 336
5. டாக்டர் சக்திபெருமாள், தமிழ் நாடக வரலாறு, ப. 208

# இரு யோகம்

*பேரறிஞர்* ம.ரா.போ. குருசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆயினும், பிரம்ம ரிஷி ஆகவில்லையே; மீண்டும் தவம் செய்ய மேற்குத் திசைநாடினான், ராஜ ரிஷி கோசிகன். நரமேதத்துக்கு யாக பசுவாக அம்பரி மன்னனால் கொல்லப்பட்ட கனச்சேபன் என்னும் முனிகுமாரன் கோசிக முனிவனைச் சரண் புகுந்தான். கனச் சேபனிடத்துக் கசிவும் கனிவும் கொண்ட கோசிகன், அவனுக்குப் பதிலாகத் தன் மக்களுள் எவரேனும் ஒருவரை யாகப் பசுவாகச் செல்லுமாறு சொல்கிறான்; எவரும் தந்தை சொல்லை ஏற்கவில்லை. மீண்டும் சினவயப்பட்டுத் தன் மக்களையே வேடராகித் திரியும்படி கோசிகன் சாபமிடுகிறான்; சரண் புகுந்த கனச்சேபனைக் காப்பாற்று தற்கு இரண்டு மந்திரங்களை உபதேசிக்கிறான். அம் மந்திரங்களின் ஆற்றலால் யாகப் பசுவாகச் சென்றாலும் கனச் சேபன் உயிர் பிழைக்கிறான்; யாகப் பசுப் பலி இல்லாமலே வேள்வி நன்கு நிறைவெய்துகிறது. கனச்சேபன் உய்ந்தும், வேள்வி நிறைவுற்றும் கூட கோசிகன் சினவயப்பட்டமையால் மீண்டும் தவம் செய்ய நேர்கிறது.

இப்போது வட திசை நோக்கிச் சென்று கோசிகன் கடுந்தவம் மேற்கொள்கிறான். மிக நெடுங்காலம் தவம் செய்கிறான். மூலாதாரக் கனலை எழுப்பி, இதயத்திலே பிரணவ மந்திரத்தை நிலை நிறுத்திக் கோசிகன் செய்யும் தவம் முருகி முதிர்ந்து சிறக்கிறது. தவ நிறைவிலே நான்முகன், திருமால், சிவன், இந்திரன் மற்றுள்ள தேவர்கள் யாவரும் எழுந்தருளிக் கோசிகனைப் 'பிரம்ம ரிஷி' எனச் சிறப்பித்து அருளுகின்றனர்.

காமம், சினம், செருக்கு இவற்றுக்கெல்லாம் இடம் தந்து வாழ்ந்த அரசன் கோசிகன், இடைவிடாத தவத்தால் இவ்வாறு பிரம்ம

ரிஷியாக - வசிட்டனுக்கு ஈடாக - வளர்ந்த வரலாறு இது; விசுவாமித்திர (பரந்தெங்கும் விரிந்துள்ள யாவற்றுக்கும் நண்பன்) முனிவர் உருவாகிய வரலாறு இது.

காமம், சினம், செருக்கு (காம வெகுளி மயக்கங்கள்) இவற்றைத் தீய்த்து-எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட பேரருளாளப் பெருந் தகையாம் பிரம்ம ரிஷி ஆவதற்கு நான்கு திசைகளிலும் பல்லாயிரம் ஆண்டுகள் தவமிருக்க நேர்ந்தது. திலோத்தமையிடம் சினம் காட்டி-திரிசங்கின் பொருட்டுச் செருக்கினைக் காட்டி - கனச்சேபனுக்காக தம் மக்களிடைமே சினம் பொங்கித் தளர்ந்த தவத்தினூடு திரிசங்குவுக்கும், கனச்சேபனுக்கும் அருள் காட்டிய பாங்கு நம்பிக்கை தரும் சுடராய் ஒளிர்ந்தது. வசிட்ட முனிவர்பால் கொண்ட பொறாமையும் சுரபி தனக்கே வேண்டுமென்ற ஆசையும் படிப்படியே மறைந்தன; தவம் செய்வார் தம் கருமம் செய்வார் என்றபடி தவம் ஒன்றே குறியாக மூலக் கனல் எழுப்பிய மாதவம் முயன்று பிரம்ம ரிஷியாக விசுவாமித்திரர் உருவாகிவிட்டார்.

வேத நெறியில் இயல்பான பிறவிவயத்தால் பிரம்ம ரிஷியானவர் வசிட்டர்; அரசனாக (சத்திரியனாக) இயல்பு நிலையில் இருந்த விசுவாமித்திரர் பிரம்ம ரிஷியாகிச் சாதனை படைத்தவர்.

இராம காதை பாட வந்த வான்மீகரும் கம்பரும் எதற்காக இந்தப் பிரம்ம ரிஷியின் கதையை விரித்துரைக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காப்பிய உருவமைப்புத் தொடர்பான இந்தச் சிந்தனையில் ஈடுபடும் போது,

*"இராம சரித்திரம் என்கிற*
*மகா கோபுரத்திற்கு விசுவாமித்திரர்*
*அஸ்திவாரக் கல் என்றே சொல்லலாம்"*[31]

* 31 - ராஜாஜி : இராமாயணம் (வானதி)- பக் 66,

என்ற கணிப்புரையினை ஒரு வழிகாட்டும் குறிப்பாகக் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது. இந்தக் கணிப்பினைத் தந்தவர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் ஆவார்.

## இராவணன் தவப் பயனழிவு

இராமகாதையின் உருவப் பாங்கு தொய்வடையும் வகையில் வரும் விசுவாமித்திரர் சிந்தனையை ஒருபால் நிறுத்தி, இராமகாதையின் எதிர்நிலைப் பாத்திரமாகிய இராவணன் பற்றிச் சிறிது சிந்திப்போம் - கம்பர் வழியில்.

விசுவாமித்திர முனிவர் அவ நிலையிலிருந்து தவநிலைக்கு வளர்ந்து உயர்ந்தார், இராவணன் தவநிலையிலிருந்து அவநிலைக்கு இழிந்தான் எனலாம். காம வெகுளி மயக்கங்களால் அவநிலையிலிருந்து தவ நிலைக்கு உயர்ந்தது வளர்நிலை; தவநிலையிலிருந்து அவ நிலைக்கு இழிந்தது தளர்நிலை.

"அமர் பொருமேல் வெல்லும் அத்தனை யல்லது தோற்றிலா விறலோன்"[32] என்று இராவணனின் வெற்றித் திறத்தினைக் கம்பர் குறிப்பிடுவார்.

தேவர்களெல்லாம் இராவணனின் ஆளுகைக்குக் கீழ் அடங்கி ஒழுகினர். இதனை,

*மரம் அடங்கலும் கற்பகம்;*
*மனையெலாம் கனகம்*
*அர மடந்தையர் சிலதியர்*
*அரக்கியர்க்கு; அமரர்*
*உரம் மடங்கி வந்து உழையராய்*
*உழல்குவர்; ஒருவர்*
*தரம் அடங்குவது அன்று இது;*
*தவம் செய்த தவமால்*[33]

---

* 32 - கம்ப 7263, 33 - கம்ப 4843,

வானுலகத்துக் கற்பக மரமன்றி வேறு எளிய மரம் இலங்கையில் இல்லை; தேவருலகைப் பொன் உலகம் என்பர். இப்போது அப் பொன்னெலாம் இலங்கை மனைகளிலே; அரக்கியர்க்கு ஏவற் சிலதியராய் இருப்பவர் தேவ மகளிரே; தேவர்களோ எனின் தங்கள் வலிமையெலாம் ஒடுங்கப் பெற்று இங்கே குற்றவேல் செய்து உழல்கின்றனர். இப்படியும் ஒருவனுக்குத் தரம் கைகூடுமா என்றால் முடியவே முடியாதுதான். ஆனால், இராவணனுக்குக் கைகூடியிருக் கிறதே; எப்படியென்றால், தவத்துக்கு மேல் தவம் செய்து செய்து பெற்ற பெருநிலை.

மேலும் பலவாறு இராவணனின் வீறு விரித்துரைக்கப்படும் இடங்கள் மிகப் பல. இந்தப் பெருநிலை பெற்றவனின் நிலை இறங்குமுகமாய் இழிந்தது ஏன், எப்படி? இதனையே இங்குக் காணவேண்டும்.

பரம யோகியாம் பரமசிவனே காமன் அம்புக்கு நைந்தான் என்றொரு செய்தி உண்டு. "வெற்றி அரனையும் கொண்ட காமன் அம்பு[34] என்பது கம்பர் வாக்கு. சீதைபற்றிச் சூர்ப்பணகையிடம் கேட்டுத் தன் வசம் இழந்த இராவணனின் நிலையைக் குறிக்கும் பாடல் :

*சிற்றிடைச் சீதை என்னும்*
*நாமமும் சிந்தை தானும்*
*உற்றிரண்டு ஒன்றாய் நின்றால்*
*ஒன்றொழித்து ஒன்றை உன்ன*
*மற்றொரு மனமும் உண்டோ?*
*மறக்கலாம் வழிமற்று யாதோ?*
*கற்றனர் ஞானம் இன்றேல்*
*காமத்தைக் கடக்கல் ஆமோ*[34]

* 34 - கம்ப 3150, 35 - கம்ப 6147

சீதையின் திருப் பெயர் பற்றினால் சிந்தை தனித்துக் காண முடியாதது. சீதை தன் ஆளுகைக்கு உட்பட்ட சிந்தனை என்ற இரண்டில் ஒன்றை விட்டு மற்றொன்றைச் சிந்திக்கும் ஆற்றல் உடைய மனம் இனிமேல் உண்டாக்கப்பட்டால்தான் உண்டு......... சிந்தை நிறைந்தது சிற்றிடைச் சீதையின் நாமம். தகாத சிந்தனை, பிறனில் விழைத லாகிய கழிகாமம்..... இதனை ஒழிக்க வெற்றுக் கல்வி கை தாராது. ஞானம் கைவரப் பெற்றவர்க் கன்றிக் காமத்தை வெல்லுதல் இயலாது.

இராவணன் கல்விக் கரை கண்டவன்; அத்துணையும் ஞானக் கனிவு பெறாத கல்விபோலும், ஆதலின் கழிகாம வயப்பட்டான். இத்தனையும் கேள்வி அளவிலேயே விளைந்துவிட்ட அவலம்.

இராமாவதாரத் திட்டத்தின் பேரவலத்துக்கு வித்து இடப்பட்டு விட்டது. "தானுடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வது ஓர் மானுட மடந்தையால்[35] என்ற சாபம் பலித்தற்கான காலம் வந்துவிட்டது. 'தாபமும் காம நோயும் ஆருயிர் கலந்த அன்றே'[36] என்பது கம்பர் வாக்கில், இராவணன் காம வெறியனாகிய நிலை புலப்படுத்தப்படுகிறது.

பாவத்தின் விளைவு முளைவிடும்போது பெரும்பாலும் எச்சரிக்கை பிறக்கும். மூத்தோர் வாயிலாகவோ, நண்பர் வாயிலா கவோ, துணைவி முதலாக உற்றார் வாயிலாகவோ ஏதேனும் ஒரு வகையில் எச்சரிக்கை கிடைப்பதுண்டு. இராவணனுக்கு மாரீசன் வாயிலாக அந்த எச்சரிக்கை கிடைத்தது.

"ஐய, நீ பெறற்கரிய செல்வதனை உரிமைச் செல்வமாகப் பெற்றிருக்கிறாய். எப்படி இவ் வீறு உனக்கு வாய்ந்தது என்பதை மறந்துவிடலாமா? நெருப்பு வளர்த்துச் செய்த பெருந்தவ முயற்சி யிலே கரமும் சிரமும் அரிந்து வேள்வித் தீயிலே இட்டாய். அளவற்ற காலம் பசி நோக்காது அருந்தவம் ஆற்றினாய். உயிரே தேயுமளவுக்கு

* 35 - கம்ப 6147
* 36 - கம்ப 3245, 46, 47.

வருந்தி நோன்பு செய்தாய். இத்தனையையும் இழக்கத் துணிந்த தவத்தால் அல்லவா பெற்றனை பெருஞ்செல்வம்! அதனை மதியாமல் புறக்கணித்தால் திரும்பவும் பெறமுடியுமா?

"அறம் திரும்பிய மறத்தினால் நீ தவம் செய்யவில்லை. மறைகள் வல்லவனே" அறத்தின் திறத்தாலே எய்திய செல்வம் உன்னுடையது. அதனை இழக்கத் துணிந்து விட்டாயா?

"அன்புக்குரியவர்களின் நாட்டைக் கவர்ந்தோர் முறைகேடாக வரிவிதிப்போர், அயலான் மனைவியைக் கவர்ந்தோர் ஆகியோரை அறமே ஒறுத்துத் தீர்க்கும். அறத்தின் தண்டனையிலிருந்து தப்பினர் எவரேனும் உண்டா?"

*அற்ற கரத்தோடு உன்தலை நீயே*
*அனல் முன்னில்*
*பற்றினை உய்த்தாய்; பற்பல காலம்*
*பசிகூர*
*உற்றுஉயிர் உள்ளே தேய உலந்தாய்;*
*பினை அன்றோ*
*பெற்றனை செல்வம்? பின் அது இகழ்ந்தால்*
*பெறல் ஆமோ*
*திறத்திற னாலே செய்தவம் முற்றித்*
*திருவுற்றாய்,*
*மறத்திற னாலோ? சொல்லுதி - சொல்ஆய்*
*மறைவல்லோய்;*
*அறத்திறனாலே எய்தினை அன்றோ?*
*அது நீயும்*
*புறத்திற னாலே பின்னும் இழக்கப்*
*புகுவாயோ*
*நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார்,*
*நடை அல்லா*

*வாரம் கொண்டார், மற்றொரு வர்க்காய்*
*மனை வாழும்*
*தாரம் கொண்டார் என்றிவர் தம்மைத்*
*தருமம் தான்*
*ஈரும் கண்டாய்; கண்டகர் உயர்ந்தார்*
*எவர் ஐயா?*[36]

மாரீசன் எச்சரிக்கை பயன்படவில்லை.

காமனை வென்றவர் வீறு உற்றார்; காமன் கணைக்கு இலக்கானோர் நிலை தளர்ந்தார்.

இராமாவதாரக் காப்பியத்தின் பாவிகமாக இதனைக் கருதலாமோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

விசுவாமித்திரன் தவ நிலை மேன்மைக்கும் இராவணனின் அவ நிலைப் புன்மைக்கும் இராமாயண பாவிகத்திலே இடம் இருக்க லாமோ? எண்ணிப் பார்க்கக் வடிய கருத்து இது.......

தவ மேன்மை வீழ்ச்சியுற்றுத் தசமுகன் வீழ்ச்சி உற்றான். அவனுக்கு ஒரு முடிவு வரும் என்று எண்ணியும் பார்க்காத மண்டோ தரி புலம்புகிறாள் :

*'தேவர்க்கும் திசைக்கரிக்கும் சிவனார்க்கும்*
*அயனார்க்கும் செங்கண் மாற்கும்*
*ஏவர்க்கும் வலியானுக்கு என்று உண்டாம்*
*இறுதி என*[37]

ஏமாப்புற்றிருந்த மண்டோதரியின் நினைப்புப் பழுதாயிற்று. தவப் பயனின் பெருமையை மட்டுமே நம்பியிருந்தாளாம், மண்டோதரி. ஆனால், 'வரம் என்னும் பாற்கடலைச் சீதை என்ற பிரையிட்டுக் கடையும் நிலை வந்து, அழிவு நேரும் என்று நான் அறியவேயில்லையே' என்று புலம்புகிறாள், மயன் மகள்:

---

* , 37 - கம்ப 9943

*திரை கடையிட்டு அளப்பு அரிய வரம் என்னும்*
*பாற்கடலைச் சீதை என்னும்*
*பிரை கடையிட்டு அழிப்பதனை அறிந்தோனோ*
*தவப்பயனின் பெருமை பார்ப்பேன்*[38]

மன்மதனுக்கு எத்தனையோ இலக்குகள் உண்டு, என்றாலும், இராவணனே அவனுக்குத் தனி இலக்கு என்கிறாள் மண்டோதரி. மன்மதன் தன் மலர்க் கணைகளால் நையும்படி எய்வதற்கும் தனி இலக்கு இராவணன்தான். மன்மதனுக்கு எதிரியாகிய இராவணனைச் சாதாரண மனி(த்)தன் வரத்தால் அழித்துவிட்டானாம்.

*நார நாள் மலர்க் கணையால், நாள் எல்லாம்*
*தோள் எல்லாம் நைய எய்யும்*
*மாரனார் தனி இலக்கை மனித்தனார்*
*அழித்தனரே வரத்தினாலே*[39]

இராவணின் பல் திறப் பேராண்மையினை நேரில் அறிந்திருந்த மயன்மகள் மனத்தில் ஏனோ காம நோய் கடுந்தவப் பயனையும் அழித்திடும் என்பது தோன்றவில்லை. மாற்றா உள்ள வாழ்க்கையள் - கண்ணகி போல.

ஆனால், மாருதி வடித்துச் சொன்ன வார்த்தையை மனங்கொண் டிருந்தால் இராவணனின் தவப் பயன் தளர்ந்திராது.

'புலன் வெறிக்கு இரையாகாமல் ஐம்புலன்களையும் வென்று அரிய மாதவம் செய்து நெடுநிலை பெற்றீர்கள். ஆனால், அருங் கற்பினளாம் பிராட்டிக்குச் செய்த கொடுமையால் - அவள் சினத்தை எதிர்கொண்டிருப்பதால் - நீக்கமுடியாத கேட்டினை இப்போது தேடிக் கொண்டீர்கள். ------ மாதவத்தால் வந்த தூய்மையை, தூயவளாகிய பிராட்டியிடத்துக் கொண்ட காமத்தால் நீயே துடைத்தெறிகிறாய்--- --- பொருளும் காமமும் ஆகியவற்றைத் தவிர வேறு அஞ்ஞான இருள் இல்லை; ஈதல், அருள்தல், காமத்தின் நீங்குதல் ஆகியவற்றைத்

* 38 - கம்ப 9944, 39 - கம்ப 9945

தவிர ஞானம் என ஒன்று தனியாக இல்லை; - இவை இராவணனிடம் மாருதி கூறிய கருத்துக்கள் :

*போய்இற் றீர்நும் புலன்வென்று போற்றிய*
*வாயில் தீர்வுஅரி தாகியமாதவம்*
*காயின் தீர்வுஅருங் கேடுஅருங் கற்பினாள்*
*தீயின் தூயவ ளைத்துயர் செய்ததால்*
*தீமை நன்மையைத் தீர்த்தல்ஒல் லாதுஎனும்*
*வாய்மை நீக்கினை மாதவத் தால்வந்த*
*தூய்மை, தூயவள் தன்வயின் தோன்றிய*
*நோய்மை யால்துடைக் கின்றனை; நோக்கலாய்*
*பொருளும் காமமும் என்றுஇவை போக்கிவேறு*
*இருள்உண் டாம்என எண்ணலர்; ஈதலும்*
*அருளும் காதலின் தீர்தலும் அல்லதுஓர்*
*தெருள்உண் டாம்என எண்ணலர் சீரியோர்*[40]

தவத்துக்கும் இடையூறாகவும் தவப் பயன் நிலைத்து நிற்பதற்கும் தடையாகவும் காமமும் வெகுளியும் அமைகின்றன. இந்தக் கருத்தை இராமாவதாரத்தின் தொடக்கத்திலிருந்து தொடர்ந்து பல இடங்களில் பல பாத்திரங்களில் இயல் செயல்களை விவரிக்கும்போது கம்பர் குறிப்பிட்டுக் கொண்டே வருகிறார்.

அரச நிலையிலிருந்து பிரம இருடி நிலைக்கு உயர்ந்த விசுவாசமித்திரர் கூற்றாகத் 'தவம் செய்வோர்கள் வெருவரச் சென்று அடை காம வெகுளி' என்று தொடக்கத்திலேயே கம்பர் கூறுகிறார். கையடைப் படலத்தில் - காப்பியத் தொடக்கத்தில் - மட்டும் அன்றித் தம் படைப்பின் முதல், நடு, இறுதி யாண்டும் இக்கருத்தினைக் கம்பர் வற்புறுத்துகிறார்.

* 40 - கம்ப 5897, 5899, 5902

முன் விசுவாமித்திரர் பற்றிய விளக்கத்தில் கண்டோம்; இப்போது இராவணன் பற்றிய விளக்கத்தில் கண்டோம்.

வாலியின் இயல் செயல் விளக்கத்திலும் இதனைக் காணலாம்.

கம்பரின் இராமாவதார அமைப்பு நெறியிலே இராவணன், வாலி, இரணியன் மூவரையும் ஒரு நிலையினராகக் கொள்ளலாம். ஒரே ஒரு விளக்கக் குறிப்பு; இராவணனிடம் காமம், வெகுளி, செருக்கு மூன்றும் உண்டு; வாலியிடம் காமமும் வெகுளியும் தெளிவாகப் புலப்படும்; இரணியனிடம் காமம் வெளிப்படையாக இல்லை, மூவரும் தவத்தினால் வந்த மேன்மையினைத் தம் தவறுகளாலேயே இழக்கின்றனர்.

கம்ப ராமாயண பாவிகக் கணிப்பிலே இந்தக் குறிப்பு மனங்கொள்ளத் தக்கது.

*(தொடரும்)*

# உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

### மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

## மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை - 625 107. போன் : 588741-56
Fax : 536535 E-mail:mmhrc@md2.vsnl.net.in



*ஜோ ஆப்செட், மதுரை-1.* ☎ 743063